2004 ஜூலை 30]

முற்பகல் 10–20

என்னுடைய தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காளிப்பேட்டை பகுதியில் — இரண்டாவது பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அந்தப் பகுதி — பல்வேறுபட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே, low voltage current *வருகிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுகிறவகையில், அந்தக் காளிப்பேட்டை பகுதியில் புதிய துணை மின்சார நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கொண்டுவர நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், 60 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டிலே, 60 துணை மின் நிலையங்கள், இந்த ஆண்டு அமைக்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செயற்குறிப்பு பெறப்பட்டு, மின் வாரியத்தினுடைய பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையாகவே அந்த இடத்திலே, அவர் குறிப்பிட்டதைப்போலவே அவசியம் இருப்பின், இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 86, திருமதி செல்வி முருகேசன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

மண்டபத்தைப் புதுப்பித்தல்

***19954–திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை முருகன் சன்னிதானத்தின் பழைய மண்டபத்தை அரசு புதுப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணி வேலைகளுக்குத் திருப்பணிக் குழு அமைத்து, நிதி வசூல் செய்து, பெரிய அளவில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளன. அப்போது, மேற்படி பழைய கல்மண்டபத்தினை அப்புறப்படுத்தி, புதிதாகப் பெரிய அளவில் மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி, அவர் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய தொகுதியான காங்கேயத்திற்கு, 32 ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் வாரி வழங்கிய மனித நேயம் மிக்க, மாசற்ற தெய்வம், தாயின் திருவடிகளுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோயிலாகும். இம்மலைக் கோயிலின் படிக்கட்டிலே, 12–2–1984 அன்று, இரட்டை மாட்டு வண்டி மேலே ஏறி, சாதனை நிகழ்த்தப்பட்டது. அத்தகைய சக்தி வாய்ந்தது இத்திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் அடிவாரத்திலிருந்து மலைக்குச் செல்லும் தார்ச் சாலையின் ஓரத்தில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்கு, ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் இன்னும் முடிவுறாமல் இருக்கின்றன. காரணம், வனத் துறையிலிருந்து, இன்னும் ஓர் அனுமதி கிடைக்கப் பெறாமல், காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைந்து அந்த அனுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். முன்புறம் அமைந்துள்ள கல்மண்டபத்தை அகற்றி, புதிதாகப் பெரிய அளவில் மண்டபம் கட்டுவதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன். இத்திருக்கோயிலின் உப கோயிலான கைலாசநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணிகள் பாதியிலேயே நிற்கின்றன; காரணம், பண வசதி போதவில்லை. சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய

சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.90 இலட்சம் நிதி உள்ளது; அந்த நிதியிலிருந்து சிறிதளவு நிதியை ஒதுக்கிக் கொடுத்து, திருப்பணிகளை விரைந்து முடித்து, கும்பாபிஷேகம் நடத்திட, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் பேரவைத் துணைத் தலைவரின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைக் கோயிலுக்குச் செல்கின்ற பாதைக்குச் சுற்றுச் சுவர் அமைக்க, தற்சமயம் அறநிலையத் துறையின்மூலமாக, டென்டர் விடப்பட்டு, வனத் துறை அலுவலரினுடைய அனுமதியை உடனடியாகப் பெற்று, அந்தப் பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்கு — அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு — தற்போது திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கு, வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு கல்மண்டபத்தை அகற்றுவதற்கும், புதிதாக மண்டபம் கட்டவும் மற்றும் அங்கே கதவுகள் போடவுமான திருப்பணிகள் செய்வதற்காக, ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்தினுடைய நிதியிலேயிருந்தும், பொது மக்களுடைய நன்கொடையிலேயிருந்தும், கூடிய விரைவில் 50 இலட்சம் ரூபாய் அளவில், திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 87, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

ஆரம்ப சுகாதார நிலையம்

***35771–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS